திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரி திரு வர்கீசையே நாம் எல்லாத் தலைமைக்கும் போட்டுக் கொண்டிருக்கிறோமே, வேறு தகுதி வாய்ந்த ஆபீஸர்கள் இல்லையா ? இவரை மாற்றி வேறு யாரையாவது அரசு போடக் கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது நிரவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகள் பாதிக்குமேல் நடைபெற்றுவிட்டன. இப்போது போய் அவரை மாற்றினால் நிர்வாகச் சீர்திருத்தத்திற்குப் பதில் நிர்வாகச் சீர்குலைவாக அது ஆகிவிடும்.

திரு. வை. பாலசுந்தரம் : ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக தமிழ் தெரியாத வர்களைப் போட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக ஆங்கிலமே தெரியாத வர்களிடம் அவர்கள் தவிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே தமிழ் தெரிந்தவர்களைத்தான் போடவேண்டும் என்பார்களா அல்லது இவர்கள் தமிழ் கற்றுத்தான் ஆகவேண்டும் என்று செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளி மாநிலங்களில் இருந்து இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வருகிறவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறது. தமிழ் நன்றாகக் கற்றுக்கொண்டி ருக்கிறார்கள். இன்னும் பொது நிகழ்ச்சியில் கூட முன்பெல்லாம் ஆங்கிலத்தில் பேசியவர்கள் நான்காண்டு காலமாக நல்ல தமிழில் பேசி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பதிலாக நம் மாநில சர்வீசுக்கு நாமே டி.ஏ.எஸ். **Tamil Nadu Administrative Service** என்பதாக ஏற்படுத்தி தேர்வு பெறுகிறவர்களை நியமிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவை எல்லாம் விரைவில் ஆகக் கூடிய காரியங்கள் அல்ல. கருத்துக்களை ஆராய்ச்சி செய்திடல் வேண்டும்.

திரு. எம். முத்தையா : ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரியை நியமிக்கும்போது பென்ஷன் தொகைதான் ஊதியமாகப் பெறுகிறாரா? தனியே அதிக ஊதியம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவருக்குத் தனியாக ஊதியம் அளிக்கப்படுகிறது.

பல்லடம் வட்டத்தில் சமுதாயக் கிணறுகள்

*696 **வினு—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்தனவா ?

(இ) ஆம் எனில், எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழவில்லை.

கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்.

***697 வினா—திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் யூனியனில் உள்ள கோபால் சமுத்திரம், திரு முல்லைவாசல் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம்

***698 வினா—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகராட்சிப் பணியின் **IA, IB, II** பிரிவு அலுவலர்களுக்கான பொறியியல் பணி விதிகளிலும், பொதுச் சுகாதாரம், மருத்துவப் பணி விதிகளிலும், நேரிடையாக அலுவலர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர் களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்று விதியுள்ளது. மற்ற **III, IV** பிரிவு அலுவலர்கள் நியமனம் சம்பந்தமாக ஷ விகிதாச் சாரம் ஏற்படுத்தப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : சென்னை மாநகராட்சி போன்ற ஸ்தல ஸ்தாபன அமைப்புகளில் அவர்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. நம் அரசு அவ்வாறு ஒதுக்குவதற்கு சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சியில்தான் அவர்களுடைய பைலாக்கள் திருத்தப்பட வேண்டும்.